DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.304/2022**

Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிகண்டன் | | : |
| த/பெ | : நாகராஜன் | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : மேலாளர் |
| வட்டம் | : சென்னை | வயது | : 35/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி -09.10.2025**

**குறுக்கு விசாரணை: PW1**

1. நான் B.Com, MBA பட்டதாரி ஆவேன். 2014 ஆம் ஆண்டில் புகார்தாரர் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். நிறுவனத்தில் உள்ள அனைத்து வேலைகளும் பார்த்துக்கொள்வது தான் என் வேலையாகும். எனது நிறுவனத்தில் எத்தனை மேலாளர்கள் உள்ளார்கள் என்றால் Production Manager, Accounts Manager, Dispatch Manager, Quality and Check Manager. நான் பொது மேலாளர் ஆவேன். நான் நிறுவனத்தின் இயக்குநர் இல்லை என்றால் சரிதான். எனக்கு இவ்வழக்கை நடத்த எப்போது அதிகாரம் தரப்பட்டது என்றால் காசோலை திருப்பப்பட்ட பின்பு அதிகார கடிதம் வழங்கப்பட்டது, தேதி நினைவில் இல்லை. ஆவணத்தில் 26.07.2022 அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அதிகாரம் வழங்குவதற்கு முன்பே நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு செல்லக்கூடியது இல்லை என்றால் தேதி வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும்.

2. எனக்கு அது குறித்து தெரியாது. பு.சா.ஆ.4 ரிட்டன் மெமோ TNagar கிளை வங்கிக்கு உட்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு இந்நீதிமன்ற வரம்புக்குள் வராது என்றால் தெரியாது, காசோலையை 3 முறை நான் வங்கியில் பணமாக்க

செலுத்தியுள்ளேன். முதல் முறை காசோலை 27.05.2022 ல் செலுத்தினேன், 2 வது முறை ஜீன் மாதம் 2022 தேதி நினைவில் இல்லை. 3 வது முறை எப்போது வங்கியில் செலுத்தினேன் என்ற தேதி நினைவில் இல்லை, ஆனால் எதிரியிடம் தெரிவித்த பின்பு தான் வங்கியில் செலுத்தினேன். பு.சா.ஆ.4 ரிட்டன் மெமோவில் வங்கியின் கையெழுத்து, முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் பிரபாகரன் முருகேசன் மற்றும் கயல் விழி என்று இரண்டு இயக்குநர்கள் உள்ளார்கள். Board Meeting மூலம் இவ்வழக்கில் நான் ஆஜர் ஆக எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாடிக்கையாளர்கள் தரும் காசோலை நான் தான் வாங்கி வருவேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் காசோலையை எங்கு வைத்து வாங்கினேன் என்றால் ஏப்ரல் மாதம் 2022 தேதி சரியாக ஞாபகமில்லை. ஏப்ரல் மாதம் 2022 இவ்வழக்கின் காசோலை வாங்கப்பட்டது என்ற விவரத்தை புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

3. எதிரியின் நிறுவனத்தில் எத்தனை இயக்குநர்கள் என்றால் சத்தியநாராயணன் உள்ள விவரம் மட்டும் தெரியும். சத்தியநாராயணன் இயக்குநர் இல்லை என்றால் சரியல்ல. எவ்வாறு இவ்வழக்கு காசோலை என் வசம் வந்தது என்று சரியாக ஞாபகமில்லை. எவ்வளவு பொருட்கள் எந்த தேதிகளில் எதிரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் ஞாபகமில்லை. எத்தனை Invoice கள் எதிரியின் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் Multiple Invoice ஆகும். எவ்வளவு தொகைக்கு Invoice வணையப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். ஆவணங்களை பார்த்தாலும் எனக்கு தெரியாது நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனத்தின் தினந்தோறும் நடவடிக்கை குறித்து எனக்கு பரிட்சயம் என்றும் எனது புகார் மனு, பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் எங்கும் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரி தரவேண்டிய தொகை குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எல்லாம் கொடுத்துள்ளேன். இவ்வழக்கில் Invoice ரசீதுகள், காசோலை, Statement தாக்கல் செய்துள்ளேன். எங்கள் நிறுவனம் கடன் மற்றும் காசோலை முறையில் வியாபாரம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிக்கும் Credit மற்றும் கடன் மூலம் தான் வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரிதான். எதிரி பிணையாக கொடுத்த காசோலையை நானே பூர்த்தி செய்து தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால்

சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் கிடைக்கும் அதே பொருட்கள் வேறு நிறுவனத்தில் மலிவு விலைக்கு கிடைப்பதால் வேறு நிறுவனத்திடம் வியாபாரம் செய்ததால் நான் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)